# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

<u>சுற்றறிக்கை எண்:56</u> <u>தேதி:-12.08.2015</u>

**BSNL ஊழியர் சங்கத்தின் முயற்சிக்கு வெற்றி!!!**

அன்பாரந்த தோழர்களே,

02.06.2013 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகள் நீதிமன்ற வழக்கின் காரணமாக இது வரை வெளியிடப்படாமல் இருந்தது. இந்த வழக்கின் தீர்ப்பு வெளியானது. அதில் 2001ஆம் ஆண்டிற்கு பிறகு உள்ள காலிப்பணியிடங்கள் புதிய RRன் படி நிரப்பப் படவேண்டும் என உத்தரவிடப்பட்டது. 2001ஆம் ஆண்டு வரையிலான காலிப்பணியிடங்கள் தொடர்பாக நிர்வாகம் மேல் முறையீடு செய்ய வேண்டும். அது மட்டுமல்லாமல் 2002ஆம் ஆண்டு முதல் காலிப்பணியிடங்கள் கணக்கீடு செய்வதில் ஒரு சில தவறுகள் ஏற்பட்டிருந்தது. தமிழ் மாநில சங்கம் இந்த பிரச்சனையை நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றது. மாநில நிர்வாகம் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு ஒரு கடிதம் எழுதியது. கார்ப்பரேட் அலுவலகத்திலிருந்து பதில் வராத சூழ்நிலையில் நமது மத்திய சங்கம் தலையிட்டு நமது வேண்டுகோளிற்கு ஏற்ப உத்தரவினை பெற்றுத் தந்தது. மறு கணக்கீடு செய்ததில் 02.06.2013 அன்று தேர்வு எழுதிய தோழர்களுக்கு காலிப்பணியிடங்கள் அதிகமாக கிடைத்தது. ஆனாலும் தமிழ் மாநில நிர்வாகம் 02.06.2013 அன்று நடைபெற்ற தேர்வு முடிவுகளை வெளியிடாமல் ஒட்டு மொத்தமாக மேல் முறையீடு முடிவு செய்திருந்தது. உடனடியாக நமது தமிழ் மாநில சங்கம் தலையிட்டு தலைமை பொதுமேலாளருக்கு கடிதம் கொடுத்து வற்புறுத்தியது. வேறு வழியின்றி தமிழ் மாநில நிர்வாகம் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு என்ன செய்வது என விளக்கம் கேட்டது.

நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் உடனடியாக கார்ப்பரேட் அலுவலகத்திற்கு சென்று இந்த தேர்வின் முடிவுகளை உடனடியாக வெளியிட வேண்டும் என வற்புறுத்தினார். அதன் அடிப்படையில் கார்ப்பரேட் அலுவலகம் மறு கணக்கீட்டின் அடிப்படையில் 02.06.2013 அன்று நடைபெற்ற தேர்வு முடிவுகளை உடனடியாக வெளியிட உத்தரவிட்டுள்ளது. அந்த அடிப்படையில் 02.06.2013 அன்று தேர்வு எழுதிய தோழர்களுக்கு மறுக்கப்பட்டிருந்த நீதியை மத்திய மாநில சங்கங்களின் கடும் முயற்சியின் காரணமாக பெற்றுத் தரப்பட்டுள்ளது. அனைத்து கேடர்களின் நியாயமான கோரிக்கைகளுக்காவும் போராடி பெற்றுத்தரங்கூடிய சங்கம் நமது BSNL ஊழியர் சங்கம் தான் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளோம். இதற்காக கடும் முயற்சியை மேற்கொண்ட BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளருக்கு தமிழ் மாநில சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். தேர்வில் வெற்றி பெற உள்ள தோழர்களுக்கும் தமிழ் மாநில சங்கத்தின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**